தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

කම්කරු හා විදේශ රැකියා අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் மற்றும் பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் நிலையியற் கட்டளை 119(4) இன் கீழ் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்

Ministry of Labour and Foreign Employment

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in term of Standing Oder No. 119(4)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் மற்றும் பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் நிலையியற் கட்டளை 119(4) இன் கீழ் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்

குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய முன்னேற்றம்
பகுதி 1: 95.00 2004.05. 11 ஆம் திகதியிடப்பட்ட 171/2004 ஆம் இலக்க அரச கணக்குச் சுற்றறிக்கையின்படி, அரசாங்க வேதனப் பட்டியலைத் தயாரிப்பது தொடர்பான கணினி மென்பொருளின் முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றப்பட்டிருக்கவில்லை.	GSP மென்பொருளின் கடவுச்சொற்களை மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை தற்போது எடுக்கப் பட்டுள்ளதுடன், அதற்கான செயன்முறையை இற்றைப் படுத்தி மேற்கொள்வதனை உரிய அலுவலர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.
நிதி ஒழுங்குவிதி 94(1) இற்கு முரணாக, செலவின விடயத்திற்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன் படுத்திய பின்னர், எஞ்சியிருக்கின்ற ஏற்பாடுகளின் வரையறையை விஞ்சிய கடப்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.	ஏற்பாடுகளின் வரையறையை விஞ்சுகின்ற உரிய பொறுப்புகளை வவுச்சர்களாக தடுக்க முடியவில்லை ஆகையால், சரியான நேரத்தில் பெற முடியவில்லை. நி.ஒ. 66 மற்றும் 69 இன் கீழ் உரிய ஏற்பாடுகளை மாற்றும் எதிர்பார்ப்புடன் நடவடிக்கை எடுக்கப்பட்ட தால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இத்தகைய நிலைமைகள் மீண்டும் ஏற்படாதவாறு தடுப்பதற்காக உரிய அலுவலர்களுக்கு விளக்கமளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் காணப்படுகின்ற கடன் மீதிகள் இருந்தன.	முற்பணக் கணக்கு கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. **திருமதி டபிள்யூ.டி.ஜி.சி. சுகததாச** **(பொது முகாமைத்துவ உதவியாளர்)** 1. திருமதி டபிள்யூ.டி.ஜி.சி. சுகததாசவின் கடன் நிலுவைத் தொகை: 139,900/= ரூபா என்பதுடன், ஒரு தவணை முறையில் 1,399 ரூபா மட்டுமே அறவிடப்பட்டுள்ளது. 2. முன்னறிவித்தலின்றி அவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதால், கடன் நிலுவைகளை அறவிடுவது தொடர்பான விடயம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு, அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 3. முன்னைய விடயங்களைக் கருத்தில்கொண்டு, காப்புறுதி கொள்கை உத்தரவாதத்தின் மீது

	கடன் வழங்குவதை இடைநிறுத்துவதற்கும், தனிநபர் பிணைப்பொறுப்புகளில் மட்டுமே கடன்களை வழங்குவதற்கும் அமைச்சினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. **வி.பி.சி. டி மெல் (அலுவலக உதவியாளர்)** திரு. வி.பி. சிந்தக டி மெலினால் பெறப்பட்ட 114,575 ரூபா கடனை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அவர் இடமாற்றம் செய்யப்பட்ட புதிய அலுவல கத்தில் அவரது கடமைகளைப் பொறுப்பேற்பதற்குத் தவறியமையால் மேற்படி அலுவலரருக்கு பதவி வறிதாக்கியமை பற்றிய அறிவித்தல் வழங்கப் பட்டுள்ளது. அதன்படி, சொல்லப்பட்ட அறிவித்தல் அவரது தனிப்பட்ட முகவரிக்கு தபாலில் அனுப்பப் பட்டுள்ளது. அவர் வசிக்கும் பிரதேசத்தின் பிரதேச செயலாளரின் உதவியுடன் கடன் மீதியை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சாரதியான திரு. பி.பி.எஸ். குமராவிடமிருந்து பெறப்படவேண்டிய 44,541/- ரூபா கடனானது, 5000/- ரூபா என்ற அடிப்படையில் தவணை முறையில் அறிவிடப்படுவதுடன், 2023 சனவரி 01 ஆம் திகதியளவில் கடன் மீதி 29,541/- ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது..
<u>பகுதி இரண்டு : 83.00</u> ஒட்டுமொத்த பதவியினரையும் கூட்டிணைத்து செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை	ஒட்டுமொத்த பதவியினர் தொடர்பான செயலாற்றுகை உடன்படிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஒப்பம் / மனுஷ நாணாயக்கார
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

මනුෂ නාණායක්කාර
කම්කරු හා විදේශ රැකියා අමාත්‍ය
කම්කරු හා විදේශ රැකියා අමාත්‍යාංශය
7 වන මහල, "මෙහෙවර පියෙස"
නාරහේන්පිට කොළඹ 05